ஆகியவற்றைப் பற்றி அவர்கள் ஆய்வு செய்வார்கள். இதுதான் இந்தப் பல்கலைக்கழகத்திலே செயல்பட இருக்கின்ற பிரிவினுடைய வேலையாகும். இதற்கு அப்பாற்பட்டு அவர்கள் வேறு வேலையை எடுத்துக் கொள்ளமாட்டார்கள்.

(முற்பகல் 9-10)

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அனைத்துத் துறைகளிலும் சிறந்தவராக விளங்கினார்கள். அவருடைய பெயரால் என்ன என்ன சப்ஜெக்ட்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள முடிவு எடுக்கப் பட்டுள்ளது ? அல்லது, என்ன என்ன பொருள்களுக்கு முக்கியத் துவம் கொடுக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களையே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அவர் சொன்ன அத்தனை கருத்துக்களையும், நாட்டுக்காக அவர் பேசிவிட்டுப் போன அத்தனைக் கருத்துகளையும், அவர் எழுதிய எழுத்துக்களையும் எல்லாம் வைத்துத்தான் அவர்கள் ஆராய இருக்கிறார்கள். ஆகவே, எதையும் விட்டுவிட்டு செய்வதாக இல்லை. எல்லாவற்றையும் வைத்துதான் செய்ய இருக்கிறார்கள்.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிப் பணிகள் முடிந்ததற்குப் பிறகு அதன் முழுப் பலனை வருங்கால மாணவர்கள் முழுமையாக பயன்பெறும் வகையில் கல்லூரிகளில் பாடப் புத்தகங்களாக வைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்ந்து நடைபெறுகிற ஒன்று. இவைகள் மூலம் பலன் பெறுகின்றவர்கள் பலன் பெற்று வருவார்கள். மாணவர்களுக்கென்று வருகின்றபொழுது அது தனியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய முயற்சி.

சேடப்பட்டி ஒன்றியத்திற்குத் தனியாக நிதி ஒதுக்கித் தரக்கோரி வந்துள்ள விண்ணப்பம்.

487 (*வினா எண் 19854)—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1984 மார்ச் 28

(அ) மதுரை மாவட்டம், சேடப்பட்டி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்திலும் செய்ய முடியாத அளவில் உள்ள வேலைகளைச் செய்து முடிப்பதற்காகத் தனியாக நிதி ஒதுக்கித் தரக் கோரி விண்ணப்பம் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 1983-84 ஆம் ஆண்டிற்குரிய கிராம வேலைத் திட்டத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட தொகை எல்லா மாவட்டங்களுக்கும் பங்கிடப்பட்டு விட்டதால் 1984-85 ஆம் நிதி ஆண்டிற்குரிய கிராம வேலைத் திட்டத்தில் நிதி நிலைக்கேற்ப இந்தத் திட்டம் சேர்த்துக் கொள்ள பரிசீலிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே சேடப்பட்டி தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதியாக இருக்கிற காரணத்தாலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலே 1984-85 ஆம் ஆண்டிலே கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திலே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது என். ஆர். இ. பி. என்று சொல்லப்படுகிற தேசிய வேலை வாய்ப்புத் திட்டமாக இருக்குமோ என்று ஐயப்படுகிறேன். தன்னிறைவுத் திட்டத்திலே கட்டிடங்கள் கட்டுதல், சாலை அமைத்தல், பாலம் அமைத்தல் போன்றவைகள் எல்லாம் முழுமையாக நிறைவேறாவிட்டாலுங்கூட, பண வசதி நமக்கு அவ்வளவு அதிகமாக இல்லாத காரணத்தாலே, இந்தப் பாலங்கள் கட்டுகிற முயற்சியாக—ஏற்கனவே ரூ. 1 இலட்சத்தில் தரைப்பாலம் ஒன்று கட்டியிருக்கிறோம், அது இந்தப் புயல் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றது. அரசு ஒரு தனித் திட்டம் கொண்டுவந்து பாலம் கட்டுகிற முயற்சியிலாவது சீக்கிரம் முடிக்க, அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, சேடப்பட்டி ஒன்றியத்தில் ஏறத்தாழ 84 வேலைகள் முடிக்கப்பட்டிருக்கின்றன ; 25 வேலைகள் முடிக்கப்படவில்லை. அந்த வேலைகளில் கூட, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாக ஏறத்தாழ 9 பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. பாக்கி இருக்கக்கூடிய 16 வேலைகள் முடிக்கப்படாமல் இருக்கின்றன. அதற்காக ஏறத்தாழ ரூ. 11.70 இலட்சம் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுதிருக்கிற நிதி நிலையிலே தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தையோ, அல்லது பாலங்களை எடுப்பதோ அல்லது பாக்கி

1984 மார்ச் 28]

யிருக்கிற சாலைகளை, பணிகளையோ எடுப்பது என்பது மிக மிகக் கஷ்டமாக இருக்கிறது. இப்பொழுது 50 சதவீதம் மானுவல் லேபர், 50 சதவீதம் மெட்டீரியல்ஸ் என்கிற முறையில்தான் நாம் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். ஆகவே, அப்படி வருகின்ற நேரத்தில் 50-ஐத் தாண்டிப் போகின்ற அந்த நிலை ஏற்படுகின்ற நேரத்தில் மத்திய அரசினுடைய அந்தக் குறித்த விதிமுறைகள் நமக்குச் சாதகமாக இல்லை. ஆகவேதான் அவைகள் எல்லாம் உடனடியாக தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திலே எடுக்கப்படவில்லை. ஆனாலுங்கூட கிராம வேலைகள் திட்டம், Village Works Programme நடைபெற்று வருகிறது. அந்தத் திட்டத்தின் மூலமாக இதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக இந்த ஆண்டு சேடப்பட்டி ஒன்றியம் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழே வேலைகள் செய்யப்பட்டு பாதியிலே பல இடங்களிலும் வேலைகள் நிற்கின்றன. அதை சேடப்பட்டியிலே நானும் பார்த்தேன். ஆகவே, அது சமுதாயச் சொத்து என்ற அடிப்படையிலே, அந்தப் பாதி வேலையை, மீதியும் செய்து முடிப்பதற்கும், செய்யப்பட்ட வேலைகளுக்கும் பணம் கொடுப்பதற்கான முயற்சியிலே அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்திலே எந்த வேலையும் பாதியிலே நிற்கவில்லை. பாதியிலே வேலை நிற்பதாகச் சொல்வது என்பது தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திலே—தன்னிறைவுத் திட்டத்திலே விடுபட்ட வேலைகளை எடுத்து நாம் செய்திருக்கிறோம்—அந்த வேலைகள் வேண்டுமானால் நிறுத்தப்பட்டிருக்கலாமே தவிர, தன்னிறைவுத் திட்டம் என்று அரசு பொது நிதியிலிருந்து கொடுக்கப்பட்டு, அதன்மூலமாக செலவு செய்யப்பட்ட எந்த வேலையும் இதுவரையில் நிலுவையில் இல்லை. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திலே ஏற்கனவே அனுமதி வாங்காமல் சில வேலைகளை அங்கங்கே எடுத்துக் கொண்டார்கள். ஆகவே, அனுமதி வாங்காமல் எடுத்துக்கொண்ட அந்த வேலைகளுக்குத்தான் பணம் கொடுக்கப்படாமல் சில ஒன்றியங்களில் இருக்கின்றனவே தவிர, வேறு நிலைமை இல்லை. எந்த, எந்த ஒன்றியங்களிலே அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கின்றனவோ, அவைகள் அரசினுடைய பரிசீலனைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. உடனடியாகப் பணம் கொடுக்கக்கூட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[1984 மார்ச் 28

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்ட வேலைகள் எடுத்துக்.கொள்ளப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில், ரூ. 50 இலட்சத்திற்குக் குறைவாக முதல்கட்ட பணிகள் ஏற்கனவே எடுத்துக் கொண்ட ஒன்றியங்களிலே பாக்கி வேலைகள் தன்னிறைவுத் திட்டப் பணிகள் நிறைவேற்றுவதற்காக, ஏற்கனவே, அரசாங்கம் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் என்ன, என்ன வேலைகள் எடுத்து கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டு, அரசுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற ஆண்டு வறட்சியின் காரணமாக, அது எடுத்துக் கொள்ளப்படவில்லை என அரசு அறிவித்தது. அந்த வேலைகளை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், முதல் கட்டத்தில் 69 ஊராட்சி ஒன்றியங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டன. முதல் கட்டத்தில் எடுக்கப்பட்ட நேரத்தில் குறைவாகத்தான் பணம் கொடுத்தோம். ஆகவே தான் முதல் கட்டத்தில் எடுக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு மட்டும் அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற முறையில் நாம் செய்திருக்கிறோம். ஆனாலும், விடுபட்ட பணிகள் ஏதாவது இருந்தாலும் விடுபட்ட கிராமங்கள் இருந்தாலும் அந்தப் பணிகளை எல்லாம் மீண்டும் எடுக்கவேண்டுமென்ற முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் நிதி நிலைமையை பார்த்துதான் நான் அதைச் சொல்ல வேண்டும். ஏனென்றால், என்னுடைய துறை மானியக் கோரிக்கை இன்னும் வரவில்லை; அவை வருகிறபோது அவைகளை எல்லாம் நான் விரிவாகச் சொல்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது தன்னிறைவுத் திட்டத்திலே எந்த வேலைகளும் பாக்கியாக விடப்படவில்லை என்று சொன்னார்கள். ஜூன் மாதத்திலே அந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மார்ச்சுக்குள் முடிக்க வேண்டுமென்ற சில கட்டாயமான சூழ்நிலைகள் இருக்கிறதால் பல வேலைகள் முடியாமல் இருக்கின்றன. உதாரணமாக என்னுடைய தொகுதியில் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் குருவிகுளம் - இராமலிங்கபுரம் ரோட்டிலுள்ள பாலமும் சேர்க்கப்பட்டிருந்தது. அந்த வேலை விடப்பட்டிருக்கிறது. பின்னாலே சேர்த்திருக்கிறோம் என்று ப்ரொபோசல் அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே விடப்படவில்லை என்று சொல்வது சரியாக இருக்காது. ஆகவே, இந்த விடுபட்ட வேலைகளைத் திரும்பவும் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் என்று சொல்லுகிறபோது பொது நிதியிலிருந்து செய்யப்படுகிற திட்டமாகும். ஆகவே கிராமங்களில் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்பது மத்திய அரசாங்கம் 50 சதவீதம், மாநில அரசாங்கம் 50 சதவீதம் என்ற முறையில் செய்யப்படுகிறது. அந்தத் திட்டத்தில் ஒரு சில நிலைகளில் அங்கே வேலைகள் பாக்கி இருக்கலாம். நான் இல்லையென்று சொல்லவில்லை. அந்த வேலைகள் எங்கெங்கே பாக்கி இருக்கிறதோ அவைகளை மீண்டும் எடுத்துச் செய்யவேண்டுமென்ற முறையில் அவைகள் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பால்மாடுகள் வாங்க வழங்கப்படும் கடன் மற்றும் மானியத் தொகை.

488 (*வினா எண் 21119) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பால்மாடுகள் வாங்க வழங்கப்படும் கடன் மற்றும் மானியத் தொகை, மதுரை மாவட்டத்தில் முதல் பால்மாட்டிற்கு வழங்குவதில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தளர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) முதல் கறவை மாடுகள் வழங்குதலுக்கு இருந்த தடையைத் தளர்த்தி 1983-84ஆம் ஆண்டுக்கான கூடுதல் திட்டம் முதல் கறவை மாடுகள் வழங்க தயாரித்து அனுப்பும்படி மதுரை மாவட்ட வளர்ச்சி முகமை அலுவலர் பணிக்கப்பட்டுள்ளார். ஆகவே முதல் கறவை மாடுகள் வழங்கப்படுகிற திட்டத்தை இந்த ஆண்டிலும் செயல்முறைப்படுத்தப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பால் மாடுகள் வழங்குகிறபோது பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மூலமாக வழங்குகிறார்கள். மதுரை மாவட்டத்தில் முதல் பால் மாட்டிற்கு கடன் கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மீண்டும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படிக் கொடுக்கிறபோது